

# ஈஷா யோக மையத்தில் மஹா தியானம்

அமாவாசைக்கு முந்திய தினம் சிவராத்திரி என அழைக்கப்படுகிறது.

சிவராத்திரியன்று ஆன்ம எழுச்சி ஒருவருக்குள் இயற்கையாகவே விதித்தெழும்படியாக, கோள்களின் அமைப்பு உள்ளது. வருடத்தில் வரும் 12 சிவராத்திரிகளுள் பிப்ரவரி-மார்ச்மாதங்களில் வரும் சிவராத்திரி மஹாசிவராத்திரி என அழைக்கப்படுகிறது.

யோககலாச்சாரத்தில் இந்த இரவில் ஆதி குருவான சிவாவின் அருளைப் போற்றிக் கொண்டாடுகின்றனர். ஒருவர் அந்த இரவன்று விழிப்புடன் அந்த முதுகுத்தண்டை நேர்நிலையில் வைத்திருப்பதன் மூலம், உள்ளம் மற்றும் ஆன்மீக நலன்களைப் பெறுகிறார். அன்றிரவு செய்யப்படும் ஆன்மீகப் பயிற்சிகள் இந்தப் பலன்களை பன்மடங்காக்குகிறது. எனவே தான் நமது பாரம்பரியத்தில் மஹா சிவராத்திரி இரவில் தூங்கக்கூடாது என சொல்லப்படுகிறது. ஆன்மீக சாதனை செய்யாதவர் கூட ஆன்ம எழுச்சி பெறுவதற்கு இந்த இரவு உதவுகிறது.

ஈஷா யோக மையத்தில், ஒவ்வொரு வருடமும் மஹாசிவராத்திரியானது மிகவும் ஆன்மீகத் தீவிரத்துடன் பொங்கி வழிகிற உணர்ச்சியுடன் கொண்டாடப்படுகிறது. உலகின் பலபகுதிகளிலிருந்தும் சுமார் 3 இலட்சம் மக்கள் அன்று இரவு அங்கு கூடுகின்றனர். சத்குரு அவர்கள் கூடியிருக்கும் மக்களுக்கு, இரவு முழுவதும், குறிப்பாக சாந்தியா காலங்களில், தியானம் நடத்துகிறார், சாந்தியா காலங்கள் என்பது காலை 6 மணி, நண்பகல் 12 மணி, மாலை



6 மணி, நள்ளிரவு 12 மணி ஆகியவை. இந்த நேரங்களில் இயற்கையே ஒரு மாறுதலுக்கு உள்ளாவதால், அந்நேரங்களில் செய்யப்படும் தியானங்களுக்கு சிறப்பான பலன்கள் கிடைக்கின்றன.



சரியாக நள்ளிரவன்று நடக்கும் மஹாமந்திர உட்சாடனை மிக சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. மாலையிலேயே நடக்கும் பல தொடர் ஆன்மீக நிகழ்வுகளின் மூலம், சத்குரு கூடியிருக்கும் அனைவரையும் பின்வரும் சக்தி வாய்ந்த தியானங்களுக்கு தயார்படுத்தி விடுகிறார்.

இரவு முழுவதும் உலகப் புகழ் வாய்ந்த இசைக்கலைஞர்கள் இசை நிகழ்ச்சிகளை அளிக்கின்றனர். மிகவும் புகழ் வாய்ந்த பண்டிட் ஜஸ்ராஜ், பண்டிட் சிவக்குமார் சர்மா, சுதா ரகுநாதன், உன்னி கிருஷ்ணன், ரெமோ பெர்னாண்டஸ், சிவமணி, மும்பை ஜெயஸ்ரீ ஆகியோர் ஈஷா யோக மையத்தில் மஹா சிவராத்திரியன்று இரவில் இசைநிகழ்ச்சி அளித்தவர்களில் சிலராவார்.

இவ்வருடம் மஹா சிவராத்திரி பிப்ரவரி 16 அன்று நடந்தது. இந்துஸ்தானி இசைக் கலைஞர்கள் பண்டிட் ராஜன் சாஜன் மிஸ்ரா, பஞ்சாப் பார் இசைக்கலைஞர் ஜஸ்பீர் ஜஸ்ஸி, மாண்டலின் இசைக் கலைஞர் யு. ஸ்ரீனிவாஸ், யு. ராஜேஸ், டஃபிக் குரேஷி ஆகியோருடன் ஈஷா இசைக்குழுவினரும் அன்று இசை நிகழ்ச்சிகள் நடத்தினர்.

விழா சரியாக மாலை 6 மணிக்கு சத்குரு அவர்கள் அனைத்து குருமார்களுக்கும் குருபூஜை செய்வதிலிருந்து துவங்கியது. மறுநாள் காலை 6 மணிக்கு சத்குருவின் தியான நிகழ்ச்சியுடன் நிறைவடைந்தது.



ஈஷா யோக மையத்திற்கு நேரில் வர முடியாதவர்களும் கண்டுகளிக்கும்படியாக இந்நிகழ்ச்சிகள் ஆஸ்தா டி.வி.யில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. மேலும் மஹா சிவராத்திரி தமிழகத்தின் வெவ்வேறு 30 மையங்களில் மட்டுமல்லாது மும்பை, டெல்லி, ஹைதராபாத், பெங்களூர், அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய இடங்களிலும் கொண்டாடப்பட்டது.

-சாய்